ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

சுற்று நிருப இல: PS/SP/SB/Circular/06/2019
2019 டிசெம்பர் 19

**சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,**

**முதலீட்டாளர்கள், கடன் வழங்கும் நிறுவனங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள், வெளிநாட்டுத் தூதரகங்கள் ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்றுவது தொடர்பாக தற்போதுள்ள பொறிமுறையை நியாயபூர்வமானதாக்கல்.**

நிரல் அமைச்சுக்கள், மாகாண சபைகள், அரசாங்க திணைக்களங்கள், ஒழுங்குபடுத்தல் நிறுவனங்கள், ஊக்குவிப்பு நிறுவனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் வேறு அரச மற்றும் அரை அரச நிறுவனங்கள் ஆகியன முதலீட்டாளர்கள் கடன் வழங்கும் நிறுவனங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் தூதரகங்களுடன் பல்வேறு நிதியளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், கடன் பெறும் ஏற்பாடுகள், கடன் வசதிகள் மற்றும் வேறு அத்தகைய ஆவணங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு தொடர்ந்து அவற்றுடன் இணைந்து செயலில் ஈடுபடுவதோடு, அதற்கப்பாற் சென்று பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MOUs), ஒப்பந்தங்கள் ஆகியவற்றை சம்பந்தப்பட்ட ஆட்சி வரைச்சட்டகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நடைமுறைகளை உரியவாறு பின்பற்றாது கைச்சாத்திடவும் செய்கின்றன என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அத்தகைய பல கொடுக்கல் வாங்கல்கள் வெளியுறவுகளுடன் தொடர்புபட்ட அமைச்சுக்கள், உரிய திறைசேரித் திணைக்களங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றிற்கு முன்னரே அறிவிக்காமல் அல்லது அவற்றின் ஒருப்பாடு இன்றியே செய்யப்படுகின்றன என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் செய்து கொள்ளப்பட்ட பல இருதரப்பு மற்றும் பல்தரப்பு ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு (MOUs) ஒப்பந்தங்கள் ஆகியன உரிய தேவை மதிப்பீடு மற்றும் போதுமான தயாரிப்புப் பணிகள் ஆகியவற்றை நிறைவேற்றாமலே மோசமான வகையில் தயாரிக்கப்பட்டு, சட்டத்தடைகள் அடங்கலான பலவித அமுலாக்கல் சிரமங்களுக்கு இட்டுச் சென்றுள்ளன என்பதன் மீது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. இது நம்பகத்தன்மை இடைவெளிகள், தரப்புகள் மத்தியில் தவறான புரிந்துணர்வு, சட்ட பிணக்குகள், நற்பெயருக்கான சேதம் மற்றும் ஒழுங்கற்ற வழக்கங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், கருத்திட்ட முகாமைத்துவத்தில் அதிக கொடுக்கல் வாங்கல் செலவுகள், கருத்திட்ட செலவின் ஒரு பாகமாக பெருமளவு பணம் செலவிட வேண்டியுள்ள பலவித ஆலோசனைச் சேவைகளின் மீது மிதமிஞ்சி தங்கியிருத்தல், தேசிய பெறுகை நடைமுறையைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக கடன் வழங்குவோருக்குரிய விதத்திலான பெறுகை வழக்கங்களை கடைப்பிடித்தல், குறிப்பாக சிறிய கருத்திட்டங்கள் தொடர்பில் அரசாங்கத்திலுள்ள மனிதவளங்களை ஈடுபடுத்துவதற்குப் பதிலாக தனியான கருத்திட்ட அலுவலகங்களை நடத்திச் செல்தல், அறிவுபூர்வமான அரசாங்க நிதி முகாமைத்துவம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை மோசமாக பாதித்துள்ள விடயமான கிடைக்கக் கூடியதாகவிருக்கும் வளங்களை பயன்படுத்துவதற்குப் பதிலாக, கட்டிடங்கள், வாகனங்கள், களஞ்சிய ஆதரவு முதலியவற்றை வாடகைக்குப் பெறுதல் ஆகியவற்றின் மீதும் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

கருத்திட்டங்கள் அடங்கலாக எந்தவொரு அரசாங்க செலவின நிகழ்ச்சிதிட்டமும் அதனைத் தொடங்குவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தையும், கருத்திட்டமொன்று வரவுசெலவுத்திட்ட சுழற்சியில் பிரவேசித்ததும் செலவு செய்தலுக்கும் கணக்காய்வு உறுதிப்படுத்தலுக்கும் உதவுமுகமாக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டவாறான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளையும் வேண்டி நிற்கின்றது என்பது அவதானிக்கப்படவேண்டும்.

இச்சூழ்நிலையில், நம்பகமான அரசாங்க சேவை வழங்கல் பொறிமுறையொன்றை நிறுவும் நோக்கில் தரமான ஆட்சி முறைக்கான அதன் பற்றுறுதிக்கேற்ப மிகவும் தெளிவானதாகவிருக்கும் அரசாங்க கொள்கை அறிக்கையின்பால் கவனம் ஈர்க்கப்படுகிறது. எனவே, பின்வருவனவற்றை மிகவும் கண்டிப்பாக பின்பற்றுமாறு தாங்கள் அறிவுறுத்தப்படுகிறீர்கள் :

1. **மிகச் சிறந்த வழக்கங்கள்**

1.1 உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் நிறுவனங்களோடு ஏதேனும் புதிய கடப்பாடுகளை மேற்கொள்வதையும் ஏதேனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MOUs) அல்லது ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதையும் தவிர்த்துக்

கொள்ளவும். அத்தகைய நடவடிக்கைகள் வெளிநாட்டுறவுகள் அமைச்சின் பொறுப்பாகும் என்பதை தயவுசெய்து அவதானிக்கவும். தேவைப்படும் ஏதேனும் தெளிவுபடுத்தல்களுக்கான வேண்டுகோள்கள் வெளிநாட்டுறவுகள் அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டும். அது தனது அதிகாரிகளில் ஒருவரை இதற்காக நியமிக்கும். அவர் நிரல் அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் தேவையான வேறு அத்தகைய நிறுவனங்களோடு நேரடியாக தொடர்பு கொள்வார்.

1.2 உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், மானிய உதவி என்ற வகையிலோ அல்லது வெளிநாட்டுக் கடன்கள் என்ற வகையிலோ அரசாங்க முதலீட்டு கருத்திட்டங்கள் தொடர்பாக முதலீட்டு ஆலோசனைகள், நிதி ஆலோசனைகள் அல்லது இருதரப்பு அல்லது பல்தரப்பு நிதியளிப்பு ஏற்பாடுகள் ஆகியவற்றைக் கையாள்வதை தவிர்த்துக் கொள்ளவும். இவை நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றின் பொறுப்புக்களாகும்.

1.3 எந்தவொரு அரசாங்க நிறுவனத்தோடும் பொது உடன்படிக்கைகள் செய்து கொள்ள விண்ணப்பிக்கும் அல்லது செய்து கொள்ளும் பொது ஒப்பந்ததாரர்கள் மற்றும் நபர்களை பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்யும் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது உடன்படிக்கைகள் சட்டத்தை நிலைநாட்டவும். எவரேனும் முகவர் அல்லது அனுசரணையாளர் தனது விபரங்கள், வரி விபரங்கள், அடையாளத்தை உறுதிப்படுத்தும் விபரங்கள் மற்றும் தனது சேவைக் கட்டணம் ஆகியவற்றையும் அத்தொகை எவ்வாறு செலுத்தப்படும், யாரால் செலுத்தப்படும் என்பதையும் முழுமையாக வெளிப்படுத்துவதை உறுதிப்படுத்தவும்.

1.4 கைச்சாத்திடப்பட்ட மற்றும் கைச்சாத்திடப்படவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (ஆமுருள) மற்றும் ஒப்பந்தங்கள் பற்றிய விரிவானதொரு நிரலை திரட்டி, தாமதங்கள் முதலிய சூழ்நிலைகளை பொருத்தமான வகையில் கையாளும் அதேவேளை, ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட அணுகுமுறையொன்றை கடைப்பிடிக்கக் கூடியதாக, எவ்வாறு தொடங்குவது என்பது பற்றிய வழிகாட்டலையும் அறிவுரையையும் பெற்றுக்கொள்வதற்காக அதனை வெளிநாட்டுறவுகள் அமைச்சிற்கு கிடைக்கச் செய்யவும்.

1.5 ஏற்கனவே இணங்கிக் கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மீது கவனத்தைக் குவிப்பதோடு, அமைச்சரவையின் அங்கீகாரம், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திர சபையிடமிருந்து அல்லது பெறுமதி மற்றும் வேறு பரிசீலனைகள் ஆகியவற்றின் அடிப்படையில் வேறு அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்கள் அல்லது நபர்களிடமிருந்து அனுமதி, கைச்சாத்திடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உடன்படிக்கைகள், கடன் ஒப்பந்தங்கள் ஆகியவற்றிற்கு கௌரவ சட்டமா அதிபரின் அங்கீகாரம் ஆகியன உள்ளனவா என்பதையும், நிதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டவாறான வரவுசெலவுத் திட்ட ஏற்பாடுகள் உள்ளனவா என்பதையும் பிரதான பொறுப்புக் கூறல் அதிகாரி என்ற வகையில் நிரல் அமைச்சின் செயலாளர் அதனைத் தொடர்ந்து துரிதமாக மேற்கொள்வது தொடர்பில் முழுமையாக அறிந்துள்ளாரா, திருப்தியுறுகிறாரா என்பதை உறுதிப்படுத்துவதற்கு நிறைவேற்றப்பட வேண்டிய ஏதேனும் நடைமுறை மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகள் உள்ளனவா என்பதையும் பரிசோதித்து சம்பந்தப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறையை ஒழுங்குமுறைப்படுத்தவும்.

2. **முன்அனுமதிக்கான தேவைப்பாடு** - இச்சுற்றுநிருபத்தில் உள்ள நடைமுறையை பின்பற்றாமல் அல்லது கௌரவ சட்டமா அதிபரிடமிருந்தும், அமைச்சரவையிடமிருந்தும் முன்அனுமதி பெறாமல் எந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் (MOUs) அல்லது ஒப்பந்தங்களையும் செய்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளவும்.

3. **முதலீட்டு முன்மொழிவுகள்** - முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்களது முதலீட்டு முன்மொழிவுகள் அனைத்தையும் அத்தகைய முன்மொழிவுகள் மீது அர்ப்பணிப்புக் கொண்டதும் அவற்றைப் பெறுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதுமான முதலீட்டுச் சபையில் (BOI) நிறுவப்பட்டுள்ள "முன்அலுவலக மேசை" க்கு அனுப்பி வைக்கவும். இம் முன்அலுவலக மேசை அத்தகைய முதலீட்டு முன்மொழிவுகளை பரிசீலிப்பதற்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ள பின்அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும். சுயாதீனமான மதிப்பீடொன்றை உறுதிப்படுத்துமுகமாக முதலீட்டாளர்கள் பின்அலுவலகத்தோடு தொடர்பு கொள்ளாதிருப்பதை முன்அலுவலக மேசை உறுதிப்படுத்தும். நியமிக்கப்பட்ட ஒரு வல்லுநர் குழு முதலீட்டாளர்களாக இருக்கக் கூடியவர்கள், உத்தேச நிதியளிப்பு மூலங்கள், முதலீட்டாளர்களாக இருக்கக் கூடியவர்களினால் இதேபோன்ற முதலீடுகளில் அடையப்பெற்ற கடந்த கால அனுபவங்கள் மற்றும் வெற்றி ஆகியவற்றை கவனத்திற்கொண்டு உத்தேச முதலீட்டின் வெற்றிபெறத்தக்க தன்மை பற்றி உரிய பரிசீலனை மேற்கொள்ளும்.

அத்தகைய வல்லுநர் குழு அரசாங்கத்தின் உத்தேச கொள்கை வரைச்சட்டகம், காணி வழங்கல், சூழல் தொடர்புபட்ட உறுதிப்படுத்தல்கள், சட்ட மற்றும் ஒழுங்கு விதி கடப்பாடுகள், ஏதேனும் தேசிய பாதுகாப்புத் தொடர்புபட்ட கரிசனைகள், எதிர்பார்க்கப்படும் வரி தொடர்பிலான சலுகைகள், மற்றும் அரசாங்கத்தின் கண்ணோட்டத்தில் முதலீட்டுத் தயார் நிலை முதலிய அரசாங்கத்திடமிருந்து கோரப்படும் கடப்பாடுகள் ஆகியவற்றின் பின்னணியில் அம்முன்மொழிவை பரிசீலிக்கும். சொல்லப்பட்ட நடைமுறை நிறைவுபெற்றதும், முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகம் (BOI) ஒரு முன்மொழிவு முதலீட்டுச் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்ட தினத்திலிருந்து 45 நாட்களுக்கு பிந்தாமல் அம்முன்மொழிவு ஏற்றுக்கொள்ளத்தக்கதா இல்லையா என்பதை சம்பந்தப்பட்ட முதலீட்டாளர்களுக்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய மதிப்பீட்டு நடைமுறை நிறைவு பெற்று முதலீட்டாளராக வரக்கூடிய ஒருவருக்கு அது பற்றிய தீர்மானமொன்று அறிவிக்கப்படும் வரை முதலீட்டுச் சபை எந்தவொரு முதலீட்டாளரையும் பதிவுசெய்யவோ அல்லது முதலீட்டு முன்மொழிவுகளை கையளிக்கும் சகல முதலீட்டாளர்களிடமிருந்தும் அறவிடப்படும் நிலையான மதிப்பீட்டுக் கட்டணத்தைத் தவிர வேறு ஏதேனும் கட்டணத்தை அல்லது சேவைக் கட்டணத்தை அறவிடவோ கூடாது.

4. **நிதியளிப்பு முன்மொழிவு** - இருதரப்பு மற்றும் பல்தரப்பு கடன் வழங்கும் நிறுவனங்கள், கருத்திட்ட நிதியளிப்போர் மற்றும் அவர்களது முகவர்கள் ஆகிய அனைவருக்கும் அவர்களது அனைத்து நிதியளிப்பு முன்மொழிவுகள் தொடர்பிலுமான முக்கிய கவன மையமாக திகழ்வது பொதுத் திறைச்சேரியேயாகும் என்பதையும் அது அத்தகைய விடயங்களில் மிகச் சிறந்த வழிகாட்டுதல்களையும், அறிவுரைகளையும் வழங்குமுகமாக "முன்அலுவலக மேசை" யை தாபிக்கும் என்பதையும் அறியத்தரவும். ஏதேனும் அமைச்சின் அல்லது நிறுவனத்தின் அதிகார வரம்பின் கீழ்வரும் சம்பந்தப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான கருத்திட்ட உருவாக்கம் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. **வெளிநாட்டு நிதியளிப்பு** - வெளிநாட்டு மூலவளத் திணைக்களமே (ERD) அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு வெளிநாட்டு நிதியளிப்பை பெற்றுக் கொள்வதற்குப் பொறுப்பாக இருக்கும் அரசாங்கத்தின் மிக உயரிய அலகாகும். வெளிநாட்டு மூலவளத் திணைக்களம் (ERD) தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரைகளின் அடிப்படையிலும் பொருத்தமானவாறு வேறு திறைசேரித் திணைக்களங்களுடன் கலந்துரையாடியும் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடும். எனவே ஏனைய அரசாங்க திணைக்களங்களும், நிறுவனங்களும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து நேரடியாக நிதிகளை கோருவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

6. **கருத்திட்ட தயாரித்தல் கட்டத்தில் கடன் வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளல்** - கடன் வழங்கும் நிறுவனங்களின் தூதுவர்களினால் பல விஜயங்கள் மேற்கொள்ளப்படுவதை இயன்றவரை குறைக்கும்வண்ணம் திறைசேரியானது, தேசிய திட்டமிடல் திணைக்களம், வெளிநாட்டு மூலவள திணைக்களம் மற்றும் தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களம் ஆகியவற்றின் ஊடாக உரிய அமைச்சுக்களோடு கலந்துரையாடி, விடயத்திற்கு ஏற்றவாறு சகல இருதரப்பு மற்றும் பல்தரப்பு கடன் வழங்கும் நிறுவனங்கள், கருத்திட்ட நிதியளிப்போர் மற்றும் அவர்களது முகவர்கள் ஆகியோருடன் சகல கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாகவும் கருத்திட்ட தயாரிப்புக் கட்டத்தில் தொடர்பு கொண்டு ஒருங்கிணைப்புச் செய்யும். இது கருத்திட்ட அமுலாக்கல் கட்டத்தில் உரிய நிரல் அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்படும் செயலாற்றுகை மீளாய்வு விஜயங்களை உள்ளடக்காது.

7. **கருத்திட்ட அமுலாக்கலை மீளாய்வு செய்தலும், கண்காணித்தலும்** - கருத்திட்ட அமுலாக்கல் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் பின்தொடர் பணிகள் ஆகியன சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சுக்களின் பொறுப்பாகும். செயற்பாட்டு பிரச்சினைகளை தீர்க்கும் நோக்கத்துடன் மீளாய்வுக் கூட்டங்கள் ஒரு மாதாந்த அடிப்படையில் சம்பந்தப்பட்ட அரச செயலாளர் மற்றும் அமுலாக்கலுக்குப் பொறுப்பான சிரேட்ட அதிகாரிகள் ஆகியோரின் பங்குபற்றலோடு நடத்தப்பட வேண்டும். தீர்க்கப்படாத ஏதேனும் பிரச்சினைகள் பட்டியலிடப்பட்டு ஒரு தீர்வு காணக்கூடிய வகையில் சகல செயலாளர்களும் கலந்துகொள்ளும் மாதாந்த செயலாளர்கள் கூட்டத்தில் கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

8. **செயற்பாட்டு கூட்டங்கள்** - காத்திரப்பூர்வமானதும், பயனுறுதிமிக்கமானதுமான அரசாங்க செலவின முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துமுகமாக, ஒருங்கிணைந்த முயற்சிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யும் வகையில் இருதரப்பு மற்றும் பல்தரப்பு நிதியளிப்பு நிறுவனங்களினால் ஆதரவளிக்கப்படும் கருத்திட்டங்கள் மற்றும்

நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் தேவையானவிடத்தும் தேவையானவாறும் தனியான செயற்பாட்டு கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.

9. **தற்போது இருக்கும் கருத்திட்டங்களைத் தொடருதல்** - நிரல் அமைச்சு மட்டத்தில் நடத்தப்படும் மீளாய்வுக் கூட்டங்களில், நிறைவுறும் நிலையை அடையும் ஏதேனும் கருத்திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடர்வதற்கான தேவை உணரப்படுமாயின், நிரல் அமைச்சு முதலில் அமுலாக்கல் மட்டத்தில் செலவிடப்பட்ட பணத்திற்கான பயன் பற்றிய ஒரு மதிப்பீட்டை மேற்கொண்டு, அத்தேவை பற்றி தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கும், வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்திற்கும் மேலும் நடவடிக்கைகளுக்காக அறிக்கையிட வேண்டும். தொடர்தல் தொடர்பாக ஒரு முடிவு வழங்கப்படும் வரை, ஏனைய அபிவிருத்தி முன்னுரிமைகள் பாதிக்கப்படுமாகையால், சாத்தியமாகும் எனும் அடிப்படையில் எவ்வித கடப்பாடும் மேற்கொள்ளப்படலாகாது.

10. **கருத்திட்ட பெறுகை** - சர்வதேச மிகச் சிறந்த வழக்கங்களின் அடிப்படையில் அனைத்து அரசாங்க முதலீட்டுச் செயற்பாடுகளுக்கும் பொருந்துகின்ற ஒரு ஒன்றிணைக்கப்பட்ட தேசிய பெறுகை முறைமையை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் பெறுகை வழக்கங்கள் நியாயபூர்வமானவையாக ஆக்கப்பட்டு இயைபுபடுத்தப்படும். புதிய கருத்திட்டங்களுக்குப் பொருந்தும் புதிய வழிகாட்டு நெறிகளை வகுப்பதற்கு விரைவில் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதோடு, சகல செயலாளர்களும் புதிய முறைமைக்கு மாறிச்செல்லக் கூடியதாக இயன்றவரை விரைவாக தற்போதுள்ள பணிகளை விரைவுபடுத்தும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் பாராளுமன்றத்தினால் முதலாவது வருடாந்த வரவுசெலவு திட்டம் அங்கீகரிக்கப்படும் வரையிலான இடைக்கால கணக்கு வாக்குப்பணம் ஒன்றின் மீது அரசாங்கம் செயற்பட்டு வருமாகையால், அமைச்சுக்களும் செலவு செய்யும் நிறுவனங்களும் நடைபெற்று வரும் பணிகளை தொடர்வதற்கு அனுமதிக்கப்படுவதோடு, சகல அமைச்சுக்களினாலும் மேற்கொள்ளப்படும் கூட்டு முயற்சி பொதுமக்களுக்கு அதிகூடிய சேவையை வழங்குமுகமாக ஒரு செலவு சிக்கன முறையில் நடைபெற்று வரும் செயற்பாடுகளை நிறைவு செய்வதை நோக்கி நடத்தப்பட வேண்டும்.

அரசியலமைப்பின் நிறைவேற்றுப் பணிகளை நிறைவேற்றுமுகமாகவும் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரசியலமைப்பு ரீதியான தலைமைத்துவத்தை மாண்புமிகு பிரதம மந்திரியின் கலந்தாலோசனையோடு நிறைவேற்றுமுகமாகவும் சனாதிபதி செயலகம் மீள்கட்டமைக்கப்பட்டுள்ளது. சனாதிபதி அலுவலகத்தின் புதிய நிறுவனக் கட்டமைப்பானது, நிரல் அமைச்சுச் செயலாளர்கள், இராஜாங்க செயலாளர்கள் மற்றும் திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச பொறுப்பு முயற்சிகள் ஆகியவற்றின் தலைவர்கள் ஆகியோர் தேவைப்படும் ஏதேனும் உதவிகளுக்காக மேலதிகச் செயலாளர்களை நேரடியாக தொடர்பு கொள்வதற்கான வசதிகளை வழங்குகின்றது.

இச்சுற்று நிருபம் தொடர்பான அல்லது நிறுவன ஏற்பாடு தொடர்பான ஏதேனும் விளக்கங்களை சனாதிபதியின் மேலதிகச் செயலாளர், செல்வி சந்திமா விக்கிரமசிங்கவிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**ஒப்பம்.:. பி.பீ.ஜயசுந்தர**
சனாதிபதியின் செயலாளர்

பிரதிகள் -
1. மாண்புமிகு பிரதமரின் செயலாளர்
2. அமைச்சரவை செயலாளர்
3. கணக்காய்வாளர் நாயகம்
4. ஆளுநர், இலங்கை மத்திய வங்கி
5. தலைவர், இலங்கை முதலீட்டுச் சபை